# JUDICIAL MAGISTRATE COURT, TIRUTTANI
## DEPOSITION OF WITNESS

M.C.No. 1/2018 Date:16.02.2021 R.W.5

பெயர் :சிவகுமார்
தந்தை பெயர் க.பெ. :முருகேசன் முதலியார்
முகவரி :
கிராமம் :
மாவட்டம் :
ஜாதி :
தொழில் : வியாபாரம்
மதம் :
வயது :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 16th day of February 2021.

குறுக்கு விசாரணை

2016ம் வருடம் மே மாதம் பேச்சுவார்த்தை நடந்ததாக கூறுவதற்கு ஆதாரம் ஏதும் தாக்கல் செய்யபட்டுள்ளதா என்றால் இல்லை. நான் எதிர் மனுதாரரின் சொந்தகாரர் அல்ல. எதிர் மனுதாரருக்கு சம்மந்தமே இல்லாத நீங்கள் உங்கள் வீட்டில் மத்தியஸ்தம் செய்வதற்கான அவசியமே இல்லை என்றால் சரியல்ல. மனுதாரர் மற்றும் எதிர் மனுதாரர்கிடையே மத்தியஸ்தம் செய்ய யார் அழைத்தது என்றால் எங்கள் அப்பா தான் போன் மூலம் அழைத்தார். அழைத்த விசயம் எனக்கு நேரடியாக தெரியாது. இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. மனுதாரர் மற்றும் எதிர் மனுதாரர்க்கு இடையே எங்கள் வீட்டில் பஞ்சாயத்து நடந்தது ஆனால் என்ன பேசிக்கொண்டார்கள் என்ற விவரம் தெரியாது, ஆனால் கடைசியில் நடந்த கலாட்டப்பற்றி தெரியும். 2.5.2016 அன்று எதிர் மனுதாரரின் தந்தைக்கு வாயில் ரத்தம் வந்ததாக கூறுவதற்கு ஏதேனும் ஆதாரம் உள்ளதா என்றால் இல்லை. உங்கள் வீட்டில் 2.5.2016 அன்று நடந்ததாக கூறும் சம்பவத்தை பற்றி போலிஸில் ஏதேனும் புகார் கொடுக்கபட்டதா என்றால் இல்லை. நீங்கள் முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் கற்பனையானவை எதிர் மனுதாரர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க அவருக்காக பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. நான் சிவபாலனின் தந்தையாரிடம் சொன்ன சங்கதிகளின் பேரில் தான் முதல் விசாரணை பிரமாண வாக்குமூலம் தயாரிக்கபட்டுள்ளது. நீங்கள் மனுதாரருக்கு எதிராக ஒரு ஆதாயத்தின் பேரில் தான் சாட்சி சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

Typed to my dictation in open court.
Read over to the witness and admitted
by the witness as correct.

Judicial Magistrate,
Tiruttani.